ஒட்டப்பிடாரத்தை வட்டமாக மாற்றல்

*505 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தை தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. எம் . முத்தையா : தலைவரவர்களே, அந்த தாலுக்கா ஆபீசுக்கு, தனியார் கட்டடம் அல்லாமல், சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பரிசீலனையில் இருக்கிறது.

உதவி கலெக்டர்கள்

*506 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ம் ஆண்டில், தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி கலெக்டர்கள் எத்தனை நபர்கள் ?

(இ) தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை நபர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஒன்பது.

(இ) தாழ்த்தப்பட்டோர் இரண்டு.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தத் தேர்வுக்கு மொத்தம் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் அதில் பெண்கள் யாராவது வந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெண்களைப் பற்றி தற்போது விபரம் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர்களே, சிறுபான்மை வகுப்பினரைச் சேர்ந்த முஸ்லீம்கள யாரேனும் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை என்றால் சிறுபான்மையாக உள்ளவர்களுக்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்ற அடிப்படையில் தமிழ் நாடு அரசு தேர்வுக் கழகத்திற்கு உத்தரவு அனுப்பப்படுமா ? எதிர் காலத்திலேயாவது சிறுபான்மையினராக இருக்கின்ற முஸ்லீம்கள் தேர்ந் தெடுக்கப்படுவார்களா ?